# முடிவுரை

# முடிவுரை

வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் காலக் கண்ணாடியாக இலக்கியம் விளங்குகிறது. கவிஞர்களின் சிந்தனைக்கும், காலச்சூழலுக்கும் ஏற்பக் கவிதைப்பொருளும், கவிதை வடிவமும் மாற்றம் பெறும் தன்மை இயல்பாகவே அமைந்துள்ளது எனலாம்.

மேலை நாடுகளில் தோன்றிய கவிதை இயக்கங்களின் தாக்கம் தமிழகத்தில் புதுக்கவிதையின் தோற்றத்திற்கு அடிகோலியது. 'வசன கவிதை' என்ற பெயரில் புதுக்கவிதை படைத்த பெருமை பாரதிக்குண்டு.

மரபுமீறலே புதுக்கவிதைக்கு அடித்தளம் அமைத்துத் தந்துள்ளது. புதுக்கவிதை என்ற சொல்லை க.நா.சுப்ரமணியம் உருவாக்கினார் என்று அறியமுடிகிறது. புதுக்கவிதையின் வளர்ச்சிக்கு மணிக்கொடி, எழுத்து, கசடதபற, வானம்பாடி முதலிய இதழ்கள் பெரிதும் உதவியுள்ளன. குறிப்பிடத் தக்க வளர்ச்சியை மணிக்கொடிக் காலத்தில் காணமுடிகின்றது. எழுத்துக் காலக் கவிஞர்களிடம் விரக்தி உணர்வு வெளிப்படுகிறது. இவ்விதழின் வளர்ச்சியில் பிராமணர் குழுச் சார்பால் தடை ஏற்பட்டுள்ளது எனலாம். உழைக்கும் வர்க்கத்தினரின் சிக்கல்களை விவரித்துக் காட்டும் முயற்சியில் கசடதபற இதழ்கள் முனைந்துள்ளன.

வானம்பாடி இதழ் புதுக்கவிதை வளர்ச்சியில் தனிமுத்திரை பதித்துள்ளது. உள்ளடக்கப் பொருள் மாற்றமும், கருத்தைத் தெளிவுறச் செய்திடும் உத்தி முறையும் புதுக்கவிதை வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்துள்ளது. வானம்பாடிக் காலக் கவிதைகள் சமூகப் பொறுப்புக்களை வலியுறுத்துவனவாக விளங்கியுள்ளன.

அரசியல் சார்பற்ற நிலையில் அரசியல் முறைகேடுகளைச் சமூகத்தினருக்கு அறிவிக்கும் பணியினை வானம்பாடி இயக்கத்தினர் மேற்கொண்டனர் என அறியமுடிகிறது.

வானம்பாடி இயக்கத்தைச் சார்ந்த புதுக்கவிஞர்கள் யதார்த்தச் சித்திரிப்பில் கவிதை படைத்துள்ளனர் என்ற கருத்துத் தெளிவாகிறது.

இன்றைய புதுக்கவிதைகள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினரின் சிக்கல்களையே பாடுபொருளாகக் கொண்டிருப்பதால் அவர்களைச் சார்ந்த சமுதாய நிலைகள் தெளிவுற எடுத்துக்காட்டப்பட்டுள்ள விதம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு விளக்கம் பெற்றுள்ளது.

இன்றைய சமுதாயத்தினரின் வாழ்க்கை நிலை பொருளாதாரத் தட்டுப்பாட்டின் காரணமாகவும், விலைவாசி உயர்வின் காரணமாகவும் வாழ்ந்தே ஆகவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. வறுமையின் நிழல் பலரை விடாது தொடர்ந்து வரும் செய்தியை, சிறுவர்களின் நிலை, பிச்சைக்காரர் நிலையின் மூலம் உணர்த்தி உள்ளனர். லாட்டரிச்சீட்டு மோகம், சினிமா மோகம் மக்களைத் திசைதிருப்பும் போக்குக் கவிஞர்களின் கருத்துக்கள் மூலம் விளக்கம் பெற்றுள்ளது.

தாய்மொழிப்பற்றுக் குறைந்து வருவதைக் கவிஞர்கள் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துள்ளனர். கடவுள் நம்பிக்கை பற்றிய கவிதைச் செய்திகள் இல்லை. மாறாக ஒவ்வொரு மனிதனிடமும் விளங்கும் 'உயர்ந்த நோக்கமே சிறந்த கடவுள்' என்ற எண்ணத்தைக் கவிதைகளில் வெளிப்படுத்தி உள்ளனர்.

சாதிப்பிரச்சனைகளும், குடிசை எரிப்புக்களும் பற்றிச் சுட்டிக்காட்டி சமுதாய முன்னேற்றத்திற்குச் சாதி, மதபேதமே தடைக்கல்லாகிறது எனக் காட்டியுள்ளனர். மதங்கள் ஒன்றிணைந்து ஓடும் நதிகளே இந்திய சமுதாயத்தைச் செழிக்கச் செய்யும் என்ற கருத்தை ஆழமாகச் சித்திரித்துள்ளனர்.

காதல் தோல்விக்குப் பெண்களே காரணம் என்பதைக் கவிஞர் பலரும் சுட்டியுள்ளனர். பெண்கள் சமூகத்தைக் குறிப்பிடுகையில் திருமணமின்மையையும், வரதட்சணைக் கொடுமையையும் சுட்டிக்காட்டும் போக்குக் கவிஞர்களிடம் காணப்படுகின்றது. இன்றைய அரசுத் திட்டங்களுள் உடனடியாகச் செயலாக வேண்டிய திட்டம் வரதட்சணை ஒழிப்புச் சட்டமே என வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

வறுமையின் காரணம் விலைமகளிர் உருவாகக் காரணம் எனக் காட்டியுள்ளனர். சுதந்திரம் என நினைத்து வேலைக்குச் சென்று சுதந்திரமிழக்கும் பெண்களைச் சித்தரித்துள்ளனர்.

சமுதாயச் சமன்பாட்டுக்கு ஒப்புரவுக் கொள்கை உடனடித் தேவை என்ற கொள்கையை வற்புறுத்தியுள்ளனர்.

தனிமனிதனிடம் மரணம் பற்றிய சிந்தனை எந்த அளவில் ஆட்கொண்டுள்ளது என்பதனைக் கவிதைகள் எடுத்துக் காட்டுகின்றன. சமுதாய முன்னேற்றம் இன்றைய கவிஞர், ஆசிரியர், மாணவர், சிறுவர் ஆகியோரைச் சார்ந்து இருப்பதால் அவர்களின் நிலையில் மாற்றம் வேண்டும் என்ற கருத்துக் கவிஞர்களால் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் முன்னேற்றம் இன்றைய தொழிலாளர்களின் உழைப்பைச் சார்ந்துதான் இருக்கிறது. எனவே தொழிலாளர்களின் உடலுழைப்பை உறிஞ்சும் பணமுதலைகளைக் கவிஞர்கள் அதிக அளவில் குறை கூறியுள்ளனர்.

தொழிலாளர் குடும்பங்களின் நீங்காத வறுமைக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்மையே காரணம் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாத வருமானத்தை நம்பி இருக்கும் ஏனைய உழைப்பாளிகளின் குடும்ப நிலையினை நன்கு சித்திரித்துள்ளனர்.

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புத்தரும் திட்டங்கள் உடனடித் தேவை என்ற செய்தியை முன்வைத்துள்ளனர். மேதினம், பொங்கல், தீபாவளி திருநாள்கள் பற்றிய புதிய சிந்தனைகளை வெளிக்கொணர்ந்து உள்ளனர்.

ஒப்புரவுக் கொள்கையுடன் லெனின், பெரியார் கண்டறிந்த பொதுவுடைமைக் கோட்பாடு இன்றைய மக்கள் சமூகத்திற்கு உடனடித் தேவை என்பதை வெளிப்படுத்தியுள்ளனர்.

பொதுவுடைமைக் கொள்கை (மார்க்சியக் கோட்பாடு) மட்டுமே இன்றைய பொருளாதாரச் சீர்கேட்டை நீக்கமுடியும் என்ற கருத்துக் கவிஞர்களின் படைப்பின்வழி புலனாகிறது.

மக்களுக்கான ஆட்சி இல்லாததால் நாடு சுதந்திரம் பெற்றும் சுதந்திரமின்மையே இன்றைய சமூகத்தில் காணப்படுகிறது என்பதனை நாடு பற்றிக் கூறும் கவிதைப் பகுதிகள் எடுத்துக்காட்டுகின்றன. பாரதி விரட்டியடித்த சீர்கேடுகளே மீண்டும் கிளர்ந்து வேர்விட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளனர். தேர்தல் முறையின் முறையற்ற செயல்கள், மக்கள் கூட்டத்தைப் பணபலத்தால் சேர்த்துக்கொண்டு ஆட்சி அமைக்கும் கட்சிகளின் நிலை, கட்சிமாறும் அரசியல்வாதிகளின் போக்கு, கொடிபிடித்து ஏமாந்து வாழ்க்கையையே பாழடித்துக் கொள்ளும், தீக்குளிக்கத் தயாராக இருக்கும்

தொண்டர்கள் நிலை ஆகியவற்றைக் கவிஞர்கள் நன்கு சித்தரித்துள்ள செயல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை மக்களின் அவல நிலையினைக் கவிஞர்கள் எடுத்துக் கூறத் தவறவில்லை. மனிதநேயத்துடன் இலங்கை மக்கள் நிலையினைச் சீர்திருத்தும் போக்கினை அரசு பின்பற்ற வேண்டும் என்பதனைக் கவிஞர்கள் வெளிப்படுத்தி உள்ளனர்.

தேசத் தலைவர்களின் தன்னலமற்ற செயல்களை நினைவுக்குக் கொண்டு வருவதன் மூலம் இன்றைய அரசியலின் சீர்கேடுகளை மக்களுக்கு உணர்த்தி, விழிப்புணர்வு ஏற்படுத்த முனைந்துள்ளனர். மக்கள் விழிப்புணர்வுடன் குரல் கொடுத்தால் மட்டுமே அரசின் முறைகேடுகள் நீங்கும், மக்களுக்கான ஆட்சி அமையும் என வலியுறுத்தியுள்ளனர்.

அரசியல், சமுதாய, பொருளாதார நிலைகளில் ஆண் ஆதிக்க சமூகத்திலிருந்து விடுதலை வேண்டும் பெண் உரிமைக் கருத்துக்கள் 'பெண்ணியம்' என்ற தலைப்பின்வழி ஆராயப்பட்டுள்ளன.

காலம் காலமாக அடக்குமுறைக்கு ஆளாகும் பெண் சமூகத்திற்கு விடுதலை வேண்டும் என்ற உணர்வைக் கவிஞர்கள் வெளிப்படுத்தி உள்ளனர். 'பெண் சிசுவதை' இன்றைய நிலையில் எவ்வளவு கொடுமையானது என்ற கருத்தைக் கவிஞர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

ஆணின் துணையாக மட்டுமன்றி ஆணின் உணர்வுக்கும் பெண்ணே காரண-மாகின்றாள். எனவே பெண்ணை அடக்கி வைக்கும் நிலை மாற வேண்டும் என்ற கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வரதட்சணையால் எரியும் குடும்ப விளக்குகள் பற்றி வருத்தமுடன் குறிப்பிட்டுள்ளனர். எரிவது பெண்கள் மட்டுமல்ல, பெண்ணைச் சார்ந்த குடும்பமும், குடும்பத்தை உள்ளடக்கிய சமூகமும் தான் என்ற கருத்தை உணர்த்தி பெண் உரிமை இயக்கத்தாரின் சிந்தனை விளக்கத்திற்கேற்பக் கவிதைகள் வழி நிறுவியுள்ளனர்.

பெண்களின் திருமணத்திற்கும், காதலுக்கும் தடையாக இருப்பது பணமே என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. பணம் பெண்ணின் வயதை மட்டுமல்ல, திருமண காலத்தையும் கூட்டிக் கொண்டு செல்கிறது என்பதை எடுத்துரைத்துள்ளனர்.

பெண்களிடம் ஏற்படும் விரக்தி நிலைக்கு இரட்டிப்பு வேலைப் பளுவைக் காரணம் என உணர்த்துகின்றனர். விதவையை வாழ்வளிக்கும் நோக்கில் அணுகவேண்டும் என்ற சிந்தனையை முன்வைத்துள்ளனர்.

பெண்வீட்டார்தரும் பணத்திற்கு மதிப்பு அளிக்காது, பெண்ணின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து நியாயமான உரிமைகளைப் பெண்ணுக்கு அளிப்பதுடன், அரவணைத்துச் செல்லும் ஆண்வர்க்கத்தின் துணையுடன்தான் இருமைச் சமநிலை உருவாக முடியும் என்பதனை நன்கு சுட்டிக் காட்டியுள்ளனர்.

'இருமைச் சமம்' என்ற உணர்வு ஆணின் மனதில் வித்திடப்பட்டால் பெண்ணினத்திடமிருந்து எழும் போர்க்குரல் சமூகத்தின் எந்த மூலையிலும் கேட்க வாய்ப்பில்லாமல் போகும் என்ற முடிவைத் தெரிவித்துள்ளனர்.

மனிதமனம் குறியீடுகளைப் படைத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றது என்ற உளவியலார் சிந்தனையுடன் நோக்குகிற்பொழுது புதுக்கவிதைகளில் 'குறியீடு' ஆட்சி செலுத்தும் இயல்பு நன்கு புலப்படுகின்றது.

பிரான்சில் தோன்றிய குறியீட்டியம் என்னும் இலக்கியக் கோட்பாடு தமிழ் இலக்கிய மரபில் இன்னும் கோட்பாடாக உருவாகவில்லை. எனினும் வடிவ அமைப்பிற்குக் கவிஞர்கள் குறியீட்டைக் கையாண்டுள்ள விதம் கவிதைகளில் வழி புலனாகிறது. கவிஞர்கள் சமுதாய உறவையும், சமுதாய அமைப்பையும் மனிதச் சிந்தனையையும், குறியீட்டின் வாயிலாகவே வெளிப்படுத்த முனைந்து வெற்றி கண்டுள்ளனர்.

சித்தர்கள் கையாண்ட குறியீட்டு இலக்கிய உத்தி, புதுக்கவிதைகளில் மீண்டும் இலக்கிய உத்தியாகச் செயல்பட்டுள்ளது. குறியீட்டு வகைகளுள் தொன்மக் குறியீட்டுக்குக் கவிஞர்கள் தனிஇடம் தந்துள்ளனர்.

சமூகம், இலக்கியம், சமயம், வரலாறு, வாழ்க்கை பற்றிய செய்திகளை வெளியிடுவதற்குக் கவிஞர்கள் குறியீடுகளையே அதிக அளவில் பயன்படுத்தி உள்ளனர். சமகால நிகழ்ச்சி விளக்கத்திற்குக் கவிஞர்களுக்குக் குறியீட்டு உத்தியே பெரிதும் உதவியுள்ளது.

இயற்கைப் பொருட்களை இன்றைய சமுதாய வெளிப்பாட்டு நிகழ்ச்சிகளில் அதிக அளவில் குறியீடாக்கி உள்ளனர். கவிஞர்கள் தங்கள் சொல் அருமையையும், சொல் சிக்கனத்தையும், மொழித் திறத்தையும் குறியீட்டு அமைப்பின்படி வெளிப்படுத்தியுள்ளனர்.

குறியீடுகளின் ஆட்சி காலச் சித்திரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவிஞர்களின் கவிதைப் படைப்புக்கள் உணர்த்தி நிற்கின்றன.

'புதுக்கவிதைகளில் நிகழ்காலச் சித்திரிப்பு' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டபொழுது, பின்வரும் தலைப்புக்களிலும் ஆய்வு மேற்கொள்ள வாய்ப்புக்கள் அதிகம் என்றறிய முடிந்தது.

1. புதுக்கவிதைகளில் சமுதாய விழிப்புணர்வு
2. புதுக்கவிதைகளில் பொதுவுடைமை
3. புதுக்கவிதைகளில் விடுதலை உணர்வு
4. புதுக்கவிதைகளில் ஒப்புரவு
5. சித்தர் பாடல்கள்-புதுக்கவிதைகள்-குறியீட்டு ஒப்பாய்வு
6. புதுக்கவிதைகளும் பெண்ணியமும்
7. புதுக்கவிதைகளில் உத்திகள்